நீதிமன்ற நெடிய வாயிலுக்கு அடைப்பு!

அதிகாரம் எதனையும் செய்யும்: அதுபற்றிக் கேட்க உரிமையில்லை

தனி மனிதனின் உரிமை பறிபோகும் கொள்ளையோ கொள்ளை!

—(0)—

நீதிபதிகள் தீர்ப்புக்கு எதிரே கவர்னரின் அவசரச்சட்டக் கூரியவாள்!

Phone No. 4502
விலை அரை அணா]

Regd. No. M. 5406
[இலங்கை 6 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (18—10—49) ☼ வெளியூர் (19—10—49) | இதழ் 68

விசாரணையின்றி காவலில வைத்தல்-கூட்டு அபராதம் விதித்தல் — கூட்ட ஊர் வலஙகளைத் தடுத்தல்-இன்றியமையாதனவாகக் கருதி அலுவலகளைக் கட்டுப் படுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்க, சென்னை அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிககும அவசரச் சட்டம் ஒன்று, 15-10-49ம் நாள் சென்னை கவர்னரால் பிறப்பிககப் பட்டிருக்கிறது.

எண்ண உரிமை — எழுத உரிமை—எடுத்துக்கூற உரிமை, இவையாவும் எங்கள் 'பூர்ண' சுயராஜ்ய ஆட்சியிலே கிடைக்கும்படி செய்வோம்; எங்களால் தான் கிடைக்கும்படி செய்ய முடியும், என்று எக்களித்து நின்றனர். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தோர் அத்தகைய 'திருக் கல்யாண' பண்பு படைத்த காங்கிரஸ்காரர்களின் ஆட்சியிலே தான், மேற்கண்ட அவசரச் சட்டம் 'அகோர தாண்டவம்' புரிகிறது. புரியலாமா? என்று கேட்பதே சட்ட விரோதம் என்று கூறும் அளவிற்கு, அதிகாரம், 'காந்திய — சத்திய— அகிம்சை' ஆட்சியில் உச்சநிலை அடைந்திருக்கிறது.

பொருத்தமானகாரணமின்றி, காவற் கைதிகளாக்கப்படும் கொடுமைக்குள்ளாக்கப் பட்டோர், 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனுச் செய்து கொள்வதன் மூலம் உயர் நீதி மன்றத்திலே நீதி பெற்று வந்தனர்.

அவதிக்குள்ளாக்கப்பட்டோர் நீதி பெற்று வெளியேறுவது 'அகிம்சை' அரசாங்கத்துக்குப் பொறுக்க முடியவில்லை. ஆகவேதான், அந்த முறையையும் தடுத்து வைக்கவேண்டி, சென்னை கவர்னர், சில நாட்களுக்கு முன், அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தார்.

அந்தச் சட்டம் செல்லுபடி ஆகாது என்று தீர்ப்பு அளித்து, ஆறு காவற் கைதிகள் தொடுதத வழக்கில் நீதி வழங்கி அவர்களை விடுதலையும் செய்துவிட்டனா சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகள் இருவர்.

இது கண்டு, நீதி தீர்ப்பு கொடுப்பது கண்டு ஆறப் பொறுக்கமாட்டாத 'ஆணவ' அதிகாரம், தன்னுடைய கூரிய வாளை நீதியின் எதிரே நிறுத்தி வைத்து, நீதியைச் செயலற்றதாக ஆக்கிவிடத் தீர்மானித்து விட்டது! அதன் விளைவுதான் சென்னை கவர்னர் 15-10-49-ல பிறப்பித்திருக்கும் அவசரச் சட்டம்.

இந்த அவசரச் சட்டம் 1947-ம் ஆண்டு சென்னை பொது அமைதிப் பாதுகாப்புச் சட்ட ஷரத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த அவசரச் சட்டம் 1948ம் ஆண்டு மார்ச் 12ம் நாள் முதல் அமுலுக்கு வந்ததாகக் கருதப்படுமாம். இறந்த காலத்தையும் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறது இந்த விசித்திரமான சட்டம்! 'காருண்ய' அரசியலிலே தான் இது நிறைவேறுகிறது!

1947ம் ஆண்டு பிறப்பிக்கப் பட்டசட்டம், 1948 மார்ச் 11ம் நாளோடு முடிவடைந்து விடுகிறது. அதை மேலும் நீட்டிக் கொள்ளவேண்டும் என்ற உணர்வு அப்பொழுது ஏற்படவில்லை! காலம் முடிந்து, பல திங்கள் ஆகி, கழிந்த திங்கள்களையும் சேர்த்து இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கும் நிலையில், இப்பொழுது அவசரச் சட்டம்! இந்தமாதிரி விசித்திரப் பிரகடனங்களைப் 'பாரதமாத தவப் புதல்வர்கள்' ஆட்சியிலல்லாமல் வேறு எங்குதான் காணமுடியும்!

தற்பொழுது சட்டசபைக் கூட்டம் நடைபெறவில்லையாதலாலும், மாகாணத்தின் தற்போதைய நிலையில் அமைதியை நிலைநிறுத்த, அரசாங்கத்திற்குச் சில அதிகாரங்கள் இருக்க வேண்டியது அவசியம் என்று கவர்னர் உணர்வதாலும், கவர்னர் ஜெனரல் அனுமதியும் பெற்றிருப்பதாலுமே, இந்த அவசரச் சட்டத்தைக் கவர்னர் பிறப்பித்துள்ளாராம்.

நீதிமன்றத்தின் நெடிய கதவுக்குத் தாழ்ப்பாள் இடும் திட்டமும், இந்த அவசரச் சட்டத்தால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

1948 மார்ச் 12-ம் நாளுக்கு முன்போ, பின்போ மேற் கூறப்பட்ட சட்டத்தின்படி அல்லது திருத்தத்தின்படி அளிக்கப்பட்ட தண்டனைகள், இந்த அவசரச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் இவ்வித தண்டனைகள், சட்டக் குறை எதுவானாலும் செல்லாதனவாகா. இந்தத் தண்டனைகள் அளித்தது சம

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

வசிட்டன் வாயால் பிரம்மரிஷிப்பட்டம்

ஆசிரியர் ஊதியம் உயர பொதுமக்கள் கிளர்ச்சி தேவையாம்!

சென்னை மாகிலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியத் தொழில் புரிபவர்களின் ஊதிய நிலை மிகவும் மோசமானதென்று நீண்ட நாட்களாக ஆசிரியர்கள் அரசியலாருக்கு எடுத்துக்காட்டிவந்தும் அவர்களுடைய குறைபாடுகள் கவனிக்கப் படவில்லை. ஆனால் "ஆசிரியர்களாகிய நீங்கள் அறிவை மக்களுக்கு வழங்குவதால் ஆசிரியர்களே உண்மையான பிராமணர்கள்" என்று ஆசிரியர்களுக்குப் பிராமணப் பட்டம் வழங்கிவிட்டார் நமநாட்டுக் கவர்னர்-ஜெனரல். அடுத்தபடியாகத் திருவண்ணாமலையில் கூடிய தாலுக்கா பஞ்சாயத் போர்டு ஆசிரியர்கள் கூட்டத்தில் தலைமை வகித்த காங்கிரஸ்காரர் ஒருவர், ஆசிரியர்கள் துரோணச்சாரி, வசிட்டர், அசுவத்தாமன் பரம்பரையிலுதித்தவர்கள் என்பதை எண்ணிப் பண்டைப் பெருமைக்குப் பாத்திராகிவிடவேண்டுமென்று பேசியுள்ளார்.

பள்ளி ஆசிரியர்களுக்குப் பிராமணப் பட்டமும், பழங்கால ரிஷிப் பாம்பரை என்ற பெருமையும் கிடைத்துவிட்டால் போதாதா! இதைவிட வேறு என்ன வேண்டும். ஊதியம் அதிகமாகக் கேட்டுக்கொண்டிருப்பது பண்டைப் பெருமைக்கு இழுக்கு ஆகுமல்லவா? எனவே ஆசிரியப் பணியாற்றுவோர் வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு, இந்தக் காற்றடைந்த பையை, ஊற்றைத் துருத்தியை, உப்புப் பாண்டத்தை மேலும் மேலும் இந்த மாய உலகில் வளர்த்துககொண்டிருப்பதற்கு இசசை கொள்ளாமல், பாசம் கடந்து, பதியை நினைந்து, கல்வியை யூட்டும் திருப்பணியை முன்னைவிடத் தீவிரமாக ஆற்றினால் போதும். இதைத்தான் நாடாளவந்தவர்கள், நாடாளும் கட்சியினர் விரும்புகின்றனர்.

ஆனல், கல்வி அமைச்சர், மன்னார்குடி தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் மாநாட்டில் பேசும்போது, "பொதுமக்களே ஆசிரியர் சம்பளஙகளை உயர்த்தவேண்டுமென்று கிளர்ச்சிசெய்யும்படி ஆசிரியர்கள் நடந்துகொள்ளவேண்டும்" என்று கூறியுள்ளார்.

எனவே, ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை உயர்த்துஙகள என்று பொதுமக்கள் கூறவேண்டியது ஒன்றுதான் பாக்கியாயிருந்தது. ஆசிரியர்கள் பொதுமக்களைச் சேர்ந்தவர்கள் அல்லபோலும்! பொதுமக்களையும் அமைச்சர்போன்றோரையும் கற்றவர்களாக்கி அனுப்பும் ஆசிரியர்கள் பொதுமக்களைச் சேராதவர்கள் போலும்! எனவே வேறாக உள்ள பொதுமக்கள் கூறிவிட்டால் உடனே, கல்வி அமைச்சர் அதைக் கவனித்துச் சம்பள உயர்வு தருவார்போலும!

ஆகவே, இனி ஆசிரியர்கள் "பொதுமக்கள் வாய் மூலம்" தங்களுக்குச் சம்பள உயர்வு கேட்க வேண்டும். அப்போதுதான் கல்வி அமைசசர் கவனிப்பார்.

நாட்டு மககளிடைக கல்வியைப் பரப்பும் ஆசிரியர்களின் நிலை இத்தகைய கேலிக்கூத்துக்கு ஆளாகி இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். அரசாஙக ஊழியர்களின் ஊதிய நிலைக்கேற்றவாறு ஆசிரியர்களின் ஊதிய நிலையும் உயர்த்தப் பட்டாலன்றி, ஆசிரியர்கள் உற்சாகத்துடன், கற்பிக்கும் ஆற்றலை எவ்வாறு பெறமுடியும்! இதைக் கல்வி அமைச்சர் உணரமுடியுமா? உணர்ந்து பொதுமக்கள் கிளர்ச்சிக்காகக் காத்திராமல் ஆவனசெய்ய முன்வருவாரா?

அவர்களுக்கு நமது அனுதாபம்!

சட்டசபை உறுப்பினரின் உயிர்நாடியான லைசென்ஸ் பெறும் சலுகைககு முற்றுப்புள்ளி வைப்பதென சென்னை அரசியலார் திட்டமிட்டு விட்டனர். "கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சாமான்களில் வியாபாரம் செய்வதற்கு, சட்டசபை, மேல்சபை உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய சுற்றத்தார்களுக்கும் 'லைசென்ஸ்' கொடுக்கக்கூடாது" என்று சென்னை அரசியலார் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளனர். இவ்வுத்தரவைக் கண்டு உள்ளம் உடையும் சில உறுப்பினர்க்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகட்டும்!

"பசிதாங்க முடியவில்லை"

சுதந்தர ஆட்சியில் ஏழை மக்கள் முறையீடு

சென்னை மாகிலக் கவர்னர் தென்னாட்டில் இப்போது சுற்றுப் பிரயாணம் செய்து வந்த போது, திருச்சித் தொழிலாளர்கள் அவரைச் சந்தித்து, தங்களுக்கு அளிக்கப்படும் 8 அவுன்ஸ் அரிசி போதவில்லை யென்றும் 2 அவுன்ஸாவதுகூட்டித் தரவேண்டுமென்றும் விண்ணப்பித்துக்கொண்டனர் பணம் காசு கேட்கவில்லை; அந்தத் தொழிலாளர்கள் சம்பள உயர்வையும் கேட்கவில்லை. "அரை வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லை. அரை வயிறாவது நிரம்புமாறு சோறு போடுங்கள்" என்றே கேட்டனர். ஆனல் உணவுப் பொருள் இருப்பு இடந்தந்தால் கவனிப்பதாகக் கவர்னர் பதிலளித்து விட்டார்.

நம் நாட்டிலே, இவ்வாண்டு விளைவு குன்றவில்லை. உற்பத்தி முன்னைவிடப் பெருக்கம். ஆனல் உணவுப் பஞ்சம் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. இந்த நிலையை விரைவில் சமாளிக்க அரசாங்கத்தாரால் தக்கதிட்டங்களை வகுக்கமுடியவில்லை. அதிக உணவு உற்பத்தி என்றால், கவர்னர்-ஜெனரல் பந்தாட்ட மைதானம், கவர்னர் மாளிகையின் நந்தவனம் மக்கள் ஓய்வுக்கு அமரும் பூங்காக்களில் சில கத்தரிக்காய்ச் செடிகளையும், சோளத்தையும் பயிரிட்டு விடுவதால், பஞ்சம் போய்விடுமா? இது கெயரண்டி செய்வது போலாகும். அரசாங்கமே பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைப பயிரிட முன் வர வேண்டும். வேலையில்லாமல் திண்டாடும் ஆட்களையும், உழவுக்குரிய இயந்திர சாதனங்களையும் பயன்படுத்தி, அரசாங்கம் தன் சொந்தச் சார்பில் பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பயிரிடத் தொடங்கினால், உணவுப் பஞ்சத்தைச் சமாளித்து விடலாம். சென்னை கவர்னர் இதற்கு வழி செய்வாரா? தம் மாளிகைத் தோட்டத்தில் பயிர் செய்வதைவிட நாட்டிலுள்ள பெருவாரியான நிலத்தை அதற்குப் பயன்படுத்தலாமே. உழைக்க ஆட்களிருக்கின்றனர், அரசாங்கத்திடம் இயந்திர சாதனங்களிருக்கின்றன, நாட்டில் போதிய நிலமிருக்கிறது. வேண்டியது மன இசைவு தானே! சுதந்தர நாட்டில் ஆட்சிப் பீடத்திலேறிய நம்மவர்களுக்குமா இவ்வாறு செய்ய மனம் வரவில்லை? கவர்னர்-இதையாவது கவனித்துத் தம் அமைச்சர்கள் மூலம் உடனடியாக இதைச் செய்ய முன் வருவாரா?

பொங்கல்விழாக் கூட்டங்கள்

இராயபுரம்

சென்னை:—இராயபுரம் தமிழ் இளைஞர் கழகத்தின் சார்பில், 18-1-50 அன்று கல்மண்டபம் மார்க்கெட் சந்திலுள்ள சாத்தாவாராயணன் கோயிலில் பொங்கல் விழாவும், கழக இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவும் கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர் எஸ். பி. இராஜபார் தலைமையில், தோழர்கள் கே. விஜயராம், இரா. செழுஞ்செழியன், காஞ்சி கலியாணசுந்தரம், வ. செயச்சந்திரன், பி. வி. முத்துசாமி, விக்கிரராஜன் ஆகியோர் விழாவைப்பற்றி விரிவானதோர் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.

ஆற்காடு

14-1-50 அன்று இவ்வூரில் பொங்கல் விழா தோழர் ஆர். டி. எஸ். மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் சிதம்பரம் பி. ஏ., கு. குப்புசாமி, ஆ. மணி எழில், ஆகியோர் பேச, தோழர் இளங்குப்பன் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது. 15-1-50 அன்று தோழர் ஏ. எல். சீதாராமன் தலைமையில், தோழர்கள் டாக்டர் சி. கே. குப்புசாமி, சி. வி. தண்டபாணி, எம். தங்கசாமி, எம். எழிலன் ஆகியோர் விழாவைப் பற்றி அரியதோர் சொற்பொழிவுகள் ஆற்ற, கூட்டம் இனிது முடிந்தது. 16—1—50 திங்களன்று தோழர் சதாசிவ (முதலியார்) தலைமையில் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் சி. கே. குப்புசாமி, சி. வி. எம். அண்ணாமலை, எம். முனிசாமி, எம். ரங்கசாமி, ஆ. மணி எழிலன் ஆகியோர் பேசினார்கள். தோழர் இளங்குப்பன் நன்றிகூறக் கூட்டம் இனிதுமுடிந்தது.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை:—இவ்வூர் தமிழ் கழகத்தின் சார்பில், விக்டோரியா பள்ளியில், 16—1—50—அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. அதுபோது, தோழர் ப. உ. சண்முகம் தலைமை வகித்தார். தோழர் டி. என். முத்துகுமாரசாமி அவர்கள் வள்ளுவர் படத்தைத் திறக்க தோழர் திருஞானசம்பந்தம் சொற்பொழிவாற்றினார். தமிழ்நாடு பத்திரிகை ஆசிரியர், தோழர் சங்கரநாராயணனும், தமிழைப் பற்றி தோழியர் அனுசூயா அம்மையும் தமிழக எல்லை பற்றி தோழர் புலவர் குருசாமி அவர்களும் தெளிவாக சொற்பொழிவாற்றினார்கள்.

மதுரை

மதுரை.—14 1 50 அன்று பொங்கல் புத்தாண்டு விழா, சுப்பிரமணியபுரம் தி. மு. க. சார்பில், தோழர் பி. சே. சேதுராமன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. சுப்பிரமணியம் தி. மு. க. கொடியேற்றினார்.

வடக்கநந்தல்

வடக்கநந்தல்:—தி. மு. க. கிளையின் சார்பில் 16-1-50 அன்று காலை கொ. மாரியப்பன் தலைமையில் ஓர் ஊர்வலம் மிகச் சிறப்புடன் பல வீதிகளின் வழியாக வந்தது. பிறகு காளைகளுக்குப் பரிசு வழங்கப்பட்டது. அன்று மாலை தோழர் வி. என். இராமன் அவர்கள் தலைமையில் பொங்கல் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் முஸ்தபா, இரங்கசாமி, க. பெ. நெடுமாறன், வீரமணி, புலவர் செ. வரதராசன் ஆகியோர் அழகாகப் பேசி விழாவினைச் சிறப்பித்தனர்.

ஏரல்

ஏரல்:—(நெல்லை மாவட்டம்) தி. மு. க. வின் சார்பில் 15-1-50 அன்று, 'பொங்கல் விழா' மிகச் சிறப்பாக நடந்தேறியது. விழாவின்போது, மிக அழகாக தோழர்கள் ஓவியமணிகள், எம். என். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர்

பெங்களூர்:—பெரியார் இராமசாமி நகர் தி. மு. க. சார்பில், 14 1 50 ல், பொங்கல் விழாக் கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் டெ. ம. துரைசாமி, வித்வான் க. சுப்பிரமணியம் ஆகியோர் பொங்கல் விழா கொண்டாட வேண்டிய அவசியம் குறித்துப் பேசினார்கள். தோழர் மு. சி. வேணுகோபால் நன்றி நவில கூட்டம் இனிதே முடிந்தது.

அய்யூர்

அய்யூர்:—உடையார்பாளையம் வட்டம் அய்யூர் கிராமத்தில் 14-1-50 அன்று தி. மு. க. வின் சார்பில் பொங்கல்விழாக் கொண்டாடப்பட்டது. அதுபோது, அ. ச. சென்னியப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். அநேகத் தோழர்கள் அரிய பல சொற்பொழிவுகளாற்ற விழா இனிது முடிந்தது.

அகரம்சேரி

அகரம்சேரி:—இவ்வூர் தி. மு. க. வின் சார்பில், ஹை ஸ்கூல் கட்டிடத்தில் 20-1-50 அன்று பொங்கல் விழா மிக விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தோழர் இராமசாமி தலைமை வகித்தார். தோழர் சி. ஆர். கோபால் அவர்கள் 'பொங்கலும், தமிழரும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

காஷ்மீர் வாக்கெடுப்பு

சர்வதேசப் போலீஸ் கண்காணிப்பு அவசியம்

காஷ்மீரில் பொதுமக்கள் வாக்கெடுப்பு எடுக்கப்படும் போது, அமைதியைப் பாதுகாக்க சர்வதேச போலீஸ் படையை உபயோகிக்க வேண்டும் என்பதை பிரிட்டனிலுள்ள 'யுனைடெட் நேஷன்ஸ்' சங்கத்தினரின் தூதுக்குழு காமன்வெல்த் உறவு மந்திரி தோழர் நோவல்பேக்கரை சந்தித்து வற்புறுத்தியிருக்கிறது.

இப்பொழுது காஷ்மீர் பிரச்னை பாதுகாப்பு சபை முன்பு விடப்பட்டிருப்பதால், இந்த யோசனையைக் குறித்துச் சொல்வதைத் தவிர வேறு இப்பொழுது எதுவும் செய்வதற்கில்லை என்று தோழர் நோவல் பேக்கர் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

இந்தப்படையை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையை, பிரிட்டிஷ் காமன்வெல்த் சொஸைட்டி என்ற ஒரு ஸ்தாபனம்தான் முதன் முதலில் வற்புறுத்தியது. ஸைலேஷியா, ஸார் ஆகிய இடங்களில் ஏற்கனவே நடைபெற்ற வாக்கெடுப்பில் சர்வதேச போலீஸ் படை வெற்றிகரமாக உபயோகிக்கப்பட்டதை இத்தூதுகோஷ்டியினர் சுட்டிக்காட்டி, அதே போல் காஷ்மீர் விஷயத்திலும் செய்யலாமே என்று தெரிவித்திருந்தனர்.

கிருமிகளைக் கொல்ல இயந்திரம்

கிருமிகளைக் கொல்லவும், தொழிற்சாலை வீடுகள் ஆகிய இடங்களில் அசுத்தங்களைப் போக்கவும், காற்றைச் சுத்தப்படுத்தவும் ஒரு புதிய கருவி பல மாதங்களின் ஆராய்ச்சியின் விளைவாக இங்குக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கிருமி ஒழிப்பு இயந்திரம் ஊதா அலைகளை வெளிவிட்டு சாத்தியமுள்ள கிருமிகளைக் கொல்லுகிறதாம்.

இதைத் தொழிற்சாலைகளில் உபயோகிப்பதின் மூலம் தொழிலாளர்களுக்கு [illegible] புழுதியிலும் கிருமிகளால் விளைவதும் வராமல் தடுக்கிறது. இதை மருந்து [illegible] உபயோகிக்கப்படுகிறதாம். இதன் விலை ரூ. 260 என்று தெரிகிறது.

கோவை மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு
கணியூர்
நன்றி அறிவிப்பு

29-1-50-ல் கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் தலைமை வகித்த, துவக்கி வைக்க, சொற்பொழிவாற்றிய அனைவருக்கும், குறிப்பாக இம்மாநாடு நடக்க என்னை உற்சாகப்படுத்தி தூண்டிய நமது தோழர் அண்ணாதுரை அவர்கட்கும், மாநாட்டு நிகழ்ச்சிகளை உடனிருந்து வெற்றிகரமாக நடத்தித் தந்த "திராவிடன்" ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்கட்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி! மாநாட்டிற்கு நன்கொடை உதவிய கிராமப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும், மாநாடு வெற்றிகரமாக நடந்தேற அல்லும் பகலும் இடைவிடாது உழைக்க கூட்டுத் தோழர்கள் அனைவருக்கும், சிறப்பாக பந்தல், மேடை முதலிய அமைப்பு வேலைகளை இரவு பகல் அயராது உழைத்து வெற்றியைத் தேடித்தந்த தோழர்கள் கே. ஏ. அருணாசலம், டி. முத்துசாமி (சசு வேலை) அவரது சகாக்கள், தாரை ஏ. கே. சிங் ஆர்டிஸ்ட் கண்ணன் அவர்கட்கும், குறிப்பாக என்னுடன் நிழல்போல் தொடர்ந்து மாநாடு முடியும் வரை அயராது உழைத்த துணைச் செயலாளர் கே. என். ஏ. முத்துவுக்கும், மாநாட்டின் முகப்பில் வைப்பதற்கென தயாரிக்கப்பட்ட தோழர் "அர்ச்சுனன்" அவர்களின் உருவத்தை இலவசமாகத் தீட்டி உதவிய, ஓவிய நிபுணர்கள் சென்னை பாலு பிரதர்ஸ் அவர்கட்கும், மாநாட்டிற்குச் சிறந்த முறையில் மின்சார அமைப்பு, ஒலி பெருக்கி ஏற்பாடுகளை நேரில் கூடவே இருந்து செய்து தந்த திருச்சி ராயல் & கோ எலக்ட்ரிக் கம்பெனி உரிமையாளருக்கும், அன்று இரவு நடந்த நாடகத்தை நடத்திக்கொடுத்த நடிகத் தோழர்கட்கும், குறிப்பாகத் தோழர் அண்ணாதுரை அவர்கட்கும், கே. ஆர். ராமசாமி, ஈ. வெ. கி. சம்பத் மற்றுமுள்ள அனைவருக்கும், எங்கள் அழைப்பிற்கிணங்கி வருகை தந்து வில்லுப்பாட்டு பாடி, மாநாட்டினரை களிப்புக் கடலில் ஆழ்த்திய கலைவாணர், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்கும் அவரது குழுவினருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
கே. ஏ. முருகேசன்,
மாநாட்டுச் செயலாளர்.

குறிப்பு:—மாநாட்டிற்காகத் தனி பஸ் வசதி செய்து கொடுத்து உதவிய ஏ. எம். எஸ். பஸ் நிர்வாகிகளுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றி.

ஹைட்ரோஜன் குண்டு

ஹைட்ரோஜன் குண்டு செய்வது எப்படி என்பது பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும் தெரிந்திருக்கலாம் என்றும், ஆனால் அதை உற்பத்தி செய்யும் சக்தி அமெரிக்காவுக்கு மட்டுமே இருக்கிறது என்றும் சில அமெரிக்க வல்லுநர்கள் கூறினார்கள்.

இந்த ஹைட்ரோஜன் குண்டு வெடிக்க 100 600 டிகிரி வெப்பம் ஏற்படுத்தப்படவேண்டுமாம்.

திருமணங்கள் அழைப்பு இதழ்

பேரன்புடையீர்!

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1981, தைத்திங்கள், 27-ம் நாள் (9-2-1950) வியாழக்கிழமை காலை 10-மணிக்குமேல் 11-மணிக்குள் கும்பகோணம் மகாதனம்பேட்டை அழகப்ப முதலியார் தெரு, 1405-ம் நெ. இல்லத்தில்

மணமகன் செல்வன்	மணமகள் செல்வி
K. நாராயணசாமி (திரு. T. S. குமாரசாமி அவர்களின் புதல்வன்)	கமலா (திரு K. K. நீலமேகம் அவர்களின் புதல்வி)
G. வடிவேலு (திரு. T. S. கோவிந்தசாமி அவர்களின் புதல்வன்)	இராஜம் (திரு K. K. நீலமேகம் அவர்களின் புதல்வி)
K. N. இராசு (திரு. K. K. நீலமேகம் அவர்களின் புதல்வன்)	சாவித்திரி (திரு. T. S. பக்கிரிசாமி அவர்களின் புதல்வி)
K. N. மாணிக்கம் (திரு. K. K. நீலமேகம் அவர்களின் புதல்வன்)	சுலோசனா (திரு. R. K. கிருஷ்ணசாமி அவர்களின் புதல்வி)
S. ராமலிங்கம் (லேட். திரு. சாமிநாதன் அவர்களின் புதல்வன்)	காமாக்ஷி (லேட். திரு. உத்திராபதி அவர்களின் புதல்வி)

ஆகியவர்களின் திருமணங்கள் தஞ்சை மாவட்ட பதிவாளர் (District Registrar) அவர்களால் பதிவு செய்யப்படும் விழாவிற்கு தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். தங்கள்

T. S. குமாரசாமி மன்னார்குடி.
T. S. கோவிந்தசாமி கும்பகோணம் T. S. பக்கிரிசாமி கும்பகோணம்
K. K. நீலமேகம் கும்பகோணம் R. K. கிருஷ்ணசாமி நாகப்பட்டிணம்

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—
R. K. சாமிவேல், வியாபாரம், நாகப்பட்டிணம் G. சண்முகம் வியாபாரம், கும்பகோணம்
R. K. சோமு " " K. N. மணி " "

வேண்டுகோள்: பல வெளியூர் திராவிடர் கழக, திராவிட முன்னேற்றக் கழக தோழர்களுக்கு விலாசம் தெரியாத காரணத்தால் தனித்தனியே அனுப்பமுடியாமல் போனதற்கு மன்னித்து, இதையே அழைப்பாகக்கொண்டு திருமணங்களுக்கு வந்திருந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அன்பிற்குரிய,
(Sd) K. K. நீலமேகம்.

குறிப்பு:—அன்பளிப்பு நிறுத்தப்பட்டிருக்கிறது

தி. மு. கழகக் கூட்டங்கள்

8—2—50

அய்யம்பேட்டை:—	இரா. நெடுஞ்செழியன்,
வாடிப்பட்டி:— (மாலை)	சி. என். அண்ணாத்துரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்,
நிலக்கோட்டை:—(இரவு)	சி. என். அண்ணாத்துரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத்.

9—2—50

பட்டிவீரன்பட்டி:—(மாலை)	சி. என். அண்ணாத்துரை, என் ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்.
திண்டுக்கல்:—(இரவு)	சி. என். அண்ணாத்துரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்.

இனி நடப்பவை

திண்டுக்கல்:—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 9-2-50 வியாழன் மாலை 6-30 மணிக்கு [illegible] மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் அ. [illegible] சிதம்பரம் தலைமைவகிப்பார். தோழர்கள் சி. என். அண்ணாத்துரை எம். ஏ., என். ஜீவரத்தினம், ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மணமகன்—தோழர் ஏ. மரியப்பன்; மணமகள்—தோழியர் செண்பகவல்லி திருமணம், 9—2—50 வியாழன் காலை 9-மணிக்கு [illegible] வெளிப் பாளையம் பெருமாள் கோவில் சன்னதி தெரு மணமகன் இல்லத்தில் தோழர் சி. வி. சி. [illegible] தலைமையில் நடைபெறும்.

திருட்டுக் குணத்தை ஒழிக்க மூளை 'ஆபரேஷன்'

லண்டன், பிப். 4—திருட்டுத் தனத்தைப்போக்க மூளை ஆபரேஷன் செய்வதே சிறந்த வழி என்று 'ஹார்லிஸ்டிரீட்'டில் டாக்டர் ஒருவர் யோசனை கூறினார்.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1

நீதிமன்ற நெடிய வாயிலுக்கு அடைப்பு!

அதிகாரம் எதனையும் செய்யும்: அதுபற்றிக் கேட்க உரிமையில்லை

தனி மனிதனின் உரிமை பறிபோகும் கொள்ளையோ கொள்ளை!

—(0)—

நீதிபதிகள் தீர்ப்புக்கு எதிரே கவர்னரின் அவசரச்சட்டக் கூரியவாள்!

விசாரணையின்றி காவலில வைத்தல்-கூட்டு அபராதம் விதித்தல்—கூட்ட ஊர்வலஙகளைத் தடுத்தல்-இன்றியமையாதனவாகக் கருதி அலுவலகளைக் கட்டுப் படுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்க, சென்னை அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிககும அவசரச சட்டம் ஒன்று, 15-10-49ம் நாள் செனனை கவர்னரால் பிறப்பிககப பட்டிருக்கிறது.

எண்ண உரிமை — எழுத உரிமை—எடுத்துக்கூற உரிமை, இவையாவும் எங்கள் 'பூர்ண' சுயராஜய ஆட்சியிலே கிடைக்கும்படி செய்வோம்; எங்களால் தான் கிடைக்கும்படி செய்ய முடியும், என்று எக்களித்து நின்றனர். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தோர் அத்தகைய 'திருக் கல்யாண' பண்பு படைத்த காங்கிரஸ்காரர்களின் ஆட்சியிலே தான், மேற்கண்ட அவசரச் சட்டம் 'அகோர தாண்டவம்' புரிகிறது. புரியலாமா? என்று கேட்பதே சட்ட விரோதம் என்று கூறும் அளவிற்கு, அதிகாரம், 'காந்திய — சத்திய— அகிம்சை' ஆட்சியில் உச்சநிலை அடைந்திருக்கிறது.

பொருத்தமானகாரணமின்றி, காவற் கைதிகளாக்கப்படும் கொடுமைக்குள்ளாக்கப் பட்டோர், 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனுச் செய்து கொள்வதன் மூலம் உயர் நீதி மன்றத்திலே நீதி பெற்று வந்தனர்.

அவதிக்குள்ளாக்கப்பட்டோர் நீதி பெற்று வெளியேறுவது 'அகிம்சை' அரசாங்கத்துக்குப் பொறுக்க முடியவில்லை. ஆகவேதான், அந்த முறையையும் தடுத்து வைக்கவேண்டி, சென்னை கவர்னர், சில நாட்களுக்கு முன், அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனம் செய்தார்.

அந்தச் சட்டம் செல்லுபடி ஆகாது என்று தீர்ப்பு அளித்து, ஆறு காவற் கைதிகள் தொடுத்த வழக்கில் நீதி வழங்கி அவர்களை விடுதலையும் செய்துவிட்டனா சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகள் இருவர்.

இது கண்டு, நீதி தீர்ப்பு கொடுப்பது கண்டு ஆறப் பொறுக்கமாட்டாத 'ஆணவ' அதிகாரம், தன்னுடைய கூரிய வாளை நீதியின் எதிரே நிறுத்தி வைத்து, நீதியைச் செயலற்றதாக ஆக்கிவிடத் தீர்மானித்து விட்டது! அதன் விளைவுதான் சென்னை கவர்னர் 15-10-49-ல் பிறப்பித்திருக்கும் அவசரச் சட்டம்.

இந்த அவசரச் சட்டம் 1947-ம் ஆண்டு சென்னை பொது அமைதிப் பாதுகாப்புச் சட்ட ஷரத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. மேலும் இந்த அவசரச் சட்டம் 1948ம் ஆண்டு மார்ச் 12ம் நாள் முதல் அமுலுக்கு வந்ததாகக் கருதபபடுமாம் இறந்த காலத்தையும் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறது இந்த விசித்திரமான சட்டம்! 'கா நண்ப' அரசியலிலே தான் இது நிறைவேறுகிறது!

1947ம் ஆண்டு பிறப்பிக்கப் பட்டசட்டம், 1948 மார்ச் 11ம் நாளோடு முடிவடைந்து விடுகிறது. அதை மேலும் நீட்டிக் கொள்ளவேண்டும் என்றஉணர்வு அப்பொழுது ஏற்படவில்லை! காலம் முடிந்து, பல திங்கள் ஆகி, கழிந்த திங்கள்களையும் சேர்த்து இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கும் நிலையில், இப்பொழுது அவசரச் சட்டம்! இந்தமாதிரி விசித்திரப் பிரகடனங்களைப் 'பாரதமாத தவப் புதல்வர்கள்' ஆட்சியிலல்லாமல் வேறு எங்குதான் காணமுடியும்!

தற்பொழுது சட்டசபைக் கூட்டம் நடைபெறவில்லையாதலாலும், மாகாணத்தின் தற்போதைய நிலையில் அமைதியை நிலைநிறுத்த, அரசாங்கத்திற்குச் சில அதிகாரங்கள் இருக்க வேண்டியது அவசியம் என்று கவர்னர் உணர்வதாலும், கவர்னர் ஜெனரல் அனுமதியும் பெற்றிருப்பதாலுமே, இந்த அவசரச் சட்டத்தைக் கவர்னர் பிறப்பித்துள்ளாராம்.

நீதிமன்றத்தின் நெடிய கதவுக்குத் தாழ்ப்பாள் இடும் திட்டமும், இந்த அவசரச் சட்டத்தால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

1948 மார்ச் 12-ம் நாளுக்கு முன்போ, பின்போ மேற்கூறப்பட்ட சட்டத்தின்படி அல்லது திருத்தத்தின்படி அளிககபபட்ட தண்டனைகள், இந்த அவசரச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் இவ்வித தண்டனைகள், சட்டக் குறை எதுவானாலும் செல்லாதனவாகா. இநதத் தணடனைகள் அளித்தது சம

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502
விலை அரை அணா]

Regd. No. M. 5405
[இலங்கை 6 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (18—10—49) வெளியூர் (19—10—49) | இதழ் 68

வசிட்டன் வாயால் பிரம்மரிஷிப்பட்டம்

ஆசிரியர் ஊதியம் உயர பொதுமக்கள் கிளர்ச்சி தேவையாம்!

சென்னை மாநிலத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியத் தொழில் புரிபவர்களின் ஊதிய நிலை மிகவும் மோசமானதென்று நீண்ட நாட்களாக ஆசிரியர்கள் அரசியலாருக்கு எடுத்துக்காட்டிவந்தும் அவர்களுடைய குறைபாடுகள் கவனிக்கப் படவில்லை. ஆனல் "ஆசிரியர்களாகிய நீங்கள் அறிவை மக்களுக்கு வழங்குவதால் ஆசிரியர்களே உண்மையான பிராமணர்கள்" என்று ஆசிரியர்களுக்குப் பிராமணப் பட்டம் வழஙகிவிட்டார் நமநாட்டுக் கவர்னர்-ஜெனரல். அடுத்தபடியாகத் திருவண்ணாமலையில் கூடிய தாலுக்கா பஞ்சாயத் போர்டு ஆசிரியர்கள் கூட்டத்தில் தலைமை வகித்த காஙகிரஸ்காரர் ஒருவர், ஆசிரியர்கள் துரோணச்சாரி, வசிட்டர், அசுவத்தாமன் பரம்பரையிலுதித்தவர்கள் என்பதை எண்ணிப் பண்டைப் பெருமைக்குப் பாத்திராகிவிடவேண்டுமென்று பேசியுள்ளார்.

பள்ளி ஆசிரியர்களுக்குப் பிராமணப் பட்டமும், பழஙகால ரிஷிப் பரம்பரை என்ற பெருமையும கிடைத்துவிட்டால் போதாதா! இதைவிட வேறு என்ன வேண்டும். ஊதியம் அதிகமாகக் கேட்டுக்கொண்டிருப்பது பண்டைப் பெருமைக்கு இழுக்கு ஆகுமல்லவா? எனவே ஆசிரியப் பணியாற்றுவோர் வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு, இந்தக் காற்றடைந்த பையை, ஊற்றைத் துருத்தியை, உப்புப் பாண்டத்தை மேலும் மேலும் இந்த மாய உலகில் வளர்த்துக்கொண்டிருப்பதற்கு இசசை கொள்ளாமல், பாசங் கடந்து, பதியை நினைந்து, கல்வியை யூட்டும் திருப்பணியை முன்னைவிடத் தீவிரமாக ஆற்றினல் போதும். இதைத்தான் நாடாளவந்தவர்கள், நாடாளும் கட்சியினர் விரும்புகின்றனர்.

ஆனல், கல்வி அமைச்சர், மன்னார்குடி தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் மாநாட்டில் பேசும்போது, "பொதுமக்களே ஆசிரியர் சம்பளஙகளை உயர்த்தவேண்டுமென்று கிளர்ச்சிசெய்யும்படி ஆசிரியர்கள் நடந்துகொள்ளவேண்டும்" என்று கூறியுள்ளார்.

எனவே, ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை உயர்த்துஙகள என்று பொதுமக்கள் கூறவேண்டியது ஒன்றுதான் பாக்கியாயிருந்தது. ஆசிரியர்கள் பொதுமக்களைச் சேர்ந்தவர்கள் அல்லபோலும்! பொதுமக்களையும் அமைச்சர்போன்றாரையும் கற்றவர்களாக்கி அனுப்பும் ஆசிரியர்கள் பொதுமக்களைச் சேராதவர்கள் போலும்! எனவே வேறாக உள்ள பொதுமக்கள் கூறிவிட்டால் உடனே கல்வி அமைச்சர் அதைக் கவனித்துச் சம்பள உயர்வு தருவார்போலும!

ஆகவே, இனி ஆசிரியர்கள் "பொதுமக்கள் வாய் மூலம்" தஙகளுக்குச் சம்பள உயர்வு கேட்க வேண்டும். அப்போதுதான் கல்வி அமைசசர் கவனிப்பார்.

நாட்டு மக்களிடைக கல்வியைப் பரப்பும் ஆசிரியர்களின் நிலை இத்தகைய கேலிக்கூத்துக்கு ஆளாகி இருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். அரசாஙக ஊழியர்களின் ஊதிய நிலைக்கேற்றவாறு ஆசிரியர்களின் ஊதிய நிலையும் உயர்த்தப் பட்டாலன்றி, ஆசிரியர்கள் உற்சாகத்துடன், கற்பிக்கும் ஆற்றலை எவ்வாறு பெறமுடியும்! இதைக் கல்வி அமைச்சர் உணரமுடியுமா? உணர்ந்து பொதுமக்கள் கிளர்ச்சிக்காகக் காத்திராமல் ஆவனசெய்ய முன்வருவாரா?

அவர்களுக்கு நமது அனுதாபம்!

சட்டசபை உறுப்பினரின் உயிர் நாடியான லைசென்ஸ் பெறும் சலுகைககு முற்றுப்புள்ளி வைப்பதென சென்னை அரசியலார் திட்டமிட்டு விட்டனர். "கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சாமான்களில் வியாபாரம் செய்வதற்கு, சட்டசபை, மேல்சபை உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய சுற்றத்தார்களுக்கும் 'லைசென்ஸ்' கொடுக்கக்கூடாது" என்று சென்னை அரசியலார் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளனர். இவ்வுத்தரவைக் கண்டு உள்ளம் உடையும சில உறுப்பினர்க்கு நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகட்டும்!

"பசிதாங்க முடியவில்லை"

சுதந்தர ஆட்சியில் ஏழை மக்கள் முறையீடு

சென்னை மாநிலக் கவர்னர் தென்னாட்டில் இப்போது சுற்றுப் பிரயாணம் செய்து வந்த போது, திருச்சித் தொழிலாளர்கள் அவரைச் சந்தித்து, தஙகளுக்கு அளிக்கப்படும் 8 அவுன்ஸ் அரிசி போதவில்லையென்றும் 2 அவுன்ஸாவது கூட்டித் தரவேண்டுமென்றும் விண்ணப்பித்துக்கொண்டனர் பணம் காசு கேட்கவில்லை; அந்தத் தொழிலாளர்கள் சம்பள உயர்வையும் கேட்கவில்லை. "அரை வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லை. அரை வயிறுவது நிரம்புமாறு சோறு போடுங்கள்" என்றே கேட்டனர். ஆனல் உணவுப் பொருள் இருப்பு இடந்தந்தால் கவனிப்பதாகக் கவர்னர் பதிலளித்து விட்டார்.

நம் நாட்டிலே, இவ்வாண்டு விளைவு குன்றவில்லை. உற்பத்தி முன்னைவிடப் பெருக்கம். ஆனல் உணவுப் பஞ்சம் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. இந்த நிலையை விரைவில் சமாளிக்க அரசாங்கத்தாரால் தக்கதிட்டங்களை வகுக்கமுடியவில்லை. அதிக உணவு உற்பத்தி என்றால், கவர்னர்-ஜெனரல் பந்தாட்ட மைதானம், கவர்னர் மாளிகையின் நந்தவனம் மக்கள் ஓய்வுக்கு அமரும் பூங்காக்களில் சில கத்தரிக்காய்ச் செடிகளையும், சோளத்தையும் பயிரிட்டு விடுவதால், பஞ்சம் போய்விடுமா? இது கையர்ண்டி செய்வது போலாகும். அரசாங்கமே பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பயிரிட முன் வர வேண்டும். வேலையில்லாமல் திண்டாடும் ஆட்களையும், உழவுக்குரிய இயந்திர சாதனங்களையும் பயன்படுத்தி, அரசாங்கம் தன் சொந்தச் சார்பில் பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பயிரிடத் தொடங்கினல், உணவுப் பஞ்சத்தைச் சமாளித்து விடலாம். சென்னை கவர்னர் இதற்கு வழி செய்வாரா? தம் மாளிகைத் தோட்டத்தில் பயிர் செய்வதைவிட நாட்டிலுள்ள பெருவாரியான நிலத்தை அதற்குப் பயன்படுத்தலாமே. உழைக்க ஆட்களிருக்கின்றனர், அரசாங்கத்திடம் இயந்திர சாதனங்களிருக்கின்றன, நாட்டில் போதிய நிலமிருக்கிறது. வேண்டியது மன இசைவு தானே! சுதந்தர நாட்டில் ஆட்சிப் பீடத்திலேறிய நம்மவர்களுக்குமா இவ்வாறு செய்ய மனம் வரவில்லை? கவர்னர்-இதையாவது கவனித்துத் தம் அமைச்சர்கள் மூலம் உடனடியாக இதைச் செய்ய முன் வருவாரா?

மாலை மணி

சென்னை 18—10—49 செவ்வாய்க்கிழமை

உரிமைப் பறிப்பில் :: :: இதுவோர் கட்டம்

மாகாண அரசாங்கங்களின் குருதியைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சி, மத்திய அரசாங்கத்தின் உடலில் அதனை ஏற்றி, மத்திய அரசாங்கத்தைக் கொழுக்கவைக்கச் செய்யும் செயல, அரசியல் அமைப்பு மன்றத்தில், தொடர்ந்துநடைபெற்றுவந்த வண்ணம் இருக்கின்றது என்பதை, நாம அடிக்கடி எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம.

மத்திய அரசாங்கத்தைச் சாரமாகத் தேக்கி, மாகாண அரசாங்கங்களைச் சக்கையாக ஆக்கும் முயற்சி, நாளுக்கு நாள வெற்றி பெற்றுக் கொண்டேதான் வருகிறது. 'தலையாட்டிகளின்' ஆதரவு ஏராளமாக இருக்கிறது என்ற ஆணவ எண்ணததை அடிப்படையாகக் கொணடு.

மாகாண உரிமைகளைப பறிக்கும பண்பை எதிர்த்துச் சிலர் அரசியல் அமைப்பு மன்றத்தில் வாதாடிவருகின்றனா என்றாலும், அவர்கள் சிலராதலின், அந்தச் சிலரின் சொல்லைச் செவி மடுக்கும், 'பெருந்தன்மை'ப் பண்பு, பெரிய கட்சியிடத்திலே இருப்பதாகத் தெரியவில்லை மந்திரி கோபாலர்கூட, மத்திய அரசாங்கம் மாகாண உரிமையைப் பறிக்கும் போக்கு பற்றி அடிக்கடி வருந்திச் சிலமொழிந்திருப்பதைக் காணலாம்.

விற்பனை வரி குறித்து மாகாண அரசாங்கம் கொண்டிருந்த அதிகாரததில் ஒரு பகுதியை மததிய அரசாங்கத்திற்குப் பிடுங்கிக் கொடுத்துள்ளது ஏகபோகக் கட்சி ஆட்சியிலுள்ள அரசியல அமைப்பு மன்றம். ஏற்றுமதி இறக்குமதிப் பொருளகளுக்கு விற்பனை வரி விதிக்கும அதிகாரம இனி மாகாணங்களுக்கு இல்லை, அது மததிய அரசாங்கத்தைச் சார்ந்ததாக ஆக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமலலாமல, மாகாணங்களுக்கிடையே கைமாறும பண்டங்களுக்கு வரி விதிக்கும அதிகாரமும, மததிய அரசாங்கததைச் சேர்ந்ததேயாகும என்று முடிவு செய்யப்பட்டாகிவிட்டது.

நிரமப வருமானங்களைத் தரக்கூடிய இரயில்வே, தபால தந்தி, சுங்கவரி, வருமானவரி, ஏற்றுமதி இறக்குமதி வரி, சுரங்க வரி, தொழில ஆலைகள வரி போன்றவைகளை எலலாம் மததிய அரசாங்கம் தனனுடையதாக ஆக்கிக்கொணடிருக்கிறது. நில வரியும விற்பனை வரியும் மட்டுமே தாம மாகாணங்களுக்கு விடப்பட்டிருந்தன. அந்த விற்பனை வரியிலும நிரமப வருமானம தரக்கூடிய பகுதியை, மத்திய அரசாங்கம் தனக்கென்றே எடுத்துக் கொள்ள, அனுமதி தரப்பட்டு விட்டது, இப்பொழுது அரசியல் அமைப்பு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 264-வது ஷரத்தின் மூலம்.

மாகாணங்கள் 'பல்லிளித்துக்கொண்டீட' தம் உரிமைகளையெல்லாம் பறிகொடுக்கும் நிலையில் கொண்டுவந்து வைக்கப்பட்டுவிட்டன!

'இப்பொழுதே, சென்னை மாகாணத்தின் வரவு-செலவு சரிப்பட்டு வரவிலலை, வரவைவிட செலவு அதிகப்படியாக ஆகும நிலையில்தான் சென்னை இருந்துகொண்டிருக்கிறது. என்று கூறப்பட்டு, செலவைச் சரிக்கட்ட, வரி மேல் வரி விதிக்கும் நிலைமை முற்றிக்கொண்டு வருவதைக் காண்கிறோம். எதிர்க்கட்சி பத்திரிகைகளிடத்திலிருந்தும், எதிர்க்கட்சிப் பிரஸ்களிடத்திலிருந்தும் எவ்வளவு அதிகமாக ஜாமீன் தொகை வாங்க முடியுமோ அவ்வளவு அதிகமாக வாங்கி, தன் கஜானாவை நிரப்பிக்கொள்ள 'ஆசைப்படும்' சென்னை அரசாங்கம், விற்பனைவரி வருமானமும் குறையும்போது, இன்னும எந்தெந்த வழிகளைக் கடைப்பிடித்தால் பணம் சேர்க்க முடியும் என்று ஆராயும் நிலையில் கொண்டுவந்துவிடப்படுமோ, அறியக்கூடவில்லை.

சென்னை மாகாணம், தன் உரிமை, அதிகாரம், நலம், வளம், மொழி. கலை எல்லாவற்றையுமபறிகொடுத்துவிட்டும், புறககணித்துவிடடும், வடநாட்டு ஆட்சிககுத் தலைகுனிந்து நிற்கவேணடிய பரிதாபகரமான காடசியைக் காட்டுவதாக வந்து சேர்ந்துவிட்டது. சென்னைமாகாணம்—திராவிடம், மீண்டும தலை தூக்கவேண்டுமானால், 'முதுகெலும்புடையவர்' முன் வந்தால்தான் இயலும். அத்தகையோர் முனவர வொட்டாமல தடைக்கற்கள் ஆங்காங்குப் போடப்பட்டிருக்கின்றன ஆளவந்தார்களால். என்றைக்காவது ஒருநாள தடைக்கற்களைத் தூள் தூளாக்கி விட்டுத் தாணடி முன்னேறும பணபுடையோா வந்துதான் தீருவர். அத்தகையோர் முனவரும் நாள எந்நாளோ என்றுதான், நாம எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம. அப்பொழுது, இன்று காணப்படும அல்லல்கள் அனைததும் அழிந்துபடும் என்பதில் ஐயமிலலை!

உரிமைப் பறிப்பில் பல கட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன, அவற்றிலே ஒன்றுதான் இது!

வரி உயரக் காரணம் என்ன?

காங்கிரஸ்காரர்கூறுகிறார்!

வரிகள் புதிது புதிதாய் விதிக்கப்படுவதற்கும், உள்ள வரிகளை உயர்த்திக்கொண்டு போவதற்கும்காரணம், அளவுக்கு மிஞ்சிய செலவே என்றும், இத்தகைய மண்டைகனத்த செலவை மாகாண அரசாங்கங்களும் மத்திய அரசாங்கமும் குறைத்துக்கொண்டால, இவ்வாறு வரிகள் மேலும் மேலும் போடடுப் பொது மக்களைத் துன்புறுத்த வேண்டிய அவசியம்நேராதென்றும் அரசியல நிர்ணய சபையில் திரு கோபாலநாராயணர் என்பார் எடுத்துரைத்தார்.

அரசாங்க நிர்வாகச் செலவைப் பெருவாரியாகக்குறைக்கவேண்டும் நம் மாகாணத்தைப் பொறுத்தமட்டில் அமைச்சர்களுக்கும் சடடசபை அங்கத்தினர்களுக்கும் தரப்படும் சம்பளங்களையும் படிசசெலவுகளையும் கணக்கிட்டாலே பயங்கரமாகவிருக்கும் இவை பெருவாரியாகக் குறைக்கப்படவேண்டும், சட்டசபை உறுப்பினர்கள் சமபளமில்லாக் கௌரவ உறுப்பினர்களாக இருந்து வரலாம்.

நாட்டுப்பற்று கொண்ட தியாகிகள் ஆட்சிபபீடத்திலமர வந்து நாட்டின் பொதுப்பணத்தைச சம்பளவடிவில், படிச்செலவுவடிவில் ஏராளமாகப் பெறுவதற்கு அவர்களுக்குத்தான் மனம் எப்படி வருகிறதோ தெரியவில்லை.

எனவே, பொதுவாக அதிகச் செலவை நிறுத்தினால் ஒருவாறு பண நெருக்கடியாவது குறையும், காங்கிரஸ் காரர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, ஏற்பட்ட பஞ்சமும் பண நெருக்கடியும் போகவேண்டுமானால் காங்கிரஸ் அமைச்சர்கள், அரசாங்க பணத்திலிருந்து ஒரு சல்லியும் சம்பளமாகப் பெறாமல் உழைக்க முன்வர வேண்டும்! மனம் வருமா!

பணுதிபதியின் பக்திப் பரவசம்!

"ஆஹா! என்ன அழகான தோற்றம்! 'வதனமே சந்திர பிம்பம்' வசீகரமான முகக் குறிகள்"

இப்படி யாரேனும் ஒருவர் ஒரு படத்தைக்கண்டு பரவச மடைவதென்றால் உங்களுக்கு ஆச்சர்யமும் ஐயமும் உண்டாகக் கூடும். "யார் இப்படிப்பட்ட பக்தா? கடவுள் பக்தரா, வேறு பக்தரா?" என்று கேட்பீர்கள். ஆனால் நீங்கள் எதிர்பார்க்கும் வண்ணம அந்த பக்தா கடவுள் பக்தருமல்ல, வேறு பக்தருமலல. நல்ல காரியவாதி; பண உலகின் அதிபதியாக விளங்கும அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ருமன்!

எங்கே, எப்பொழுது, எந்தப படத்தைக்கண்டு இப்படிப் பரவசமானார் அவா தெரியுமா? வாஷிங்டனில் இந்திய தூதுவர் அலுவலகததில், இந்திய முதலமைச்சர் பண்டித நேருவுக்கும, தோழியர் விஜயலட்சுமி பண்டிட் அவாகடகும் ஒரு விருந்தளிக்கப் பட்டபோது அவ்வலுவலகத்துக்கு வந்திருந்த ட்ருமன் தம்பதிகள், அங்கு அமைக்கப்பட்டிருந்த இந்தியத் தலைவர்களின் படங்களைப் பார்த்துப் பரவசமடைந்தனராம். அப்படங்களுள் பண்டித நேருவின் தந்தையார் பண்டித மோதிலால் நேருவின் படத்தைப் பார்த்தபோது, தோழர் ட்ருமன் "மிக அழகிய உருவம்! வசீகரமான முகக் குறிகளை உடையவர்" என்று ட்ருமன் குறிப்பிட்டாராம். அது மட்டுமல்ல, ட்ருமன் தம்பதிகள் அப் படத்தைப் பார்த்து பரவசமடைந்து அசையாமல் அப்படியே சிறிது நேரம நின்று விட்டனராம்! இது நமது தேசிய ஏடுகள் தரும செய்தி. பண்டித மோதிலால நேருவின் படத்தைக்கண்டு பண உலகின அதிபதி பரவசமடைந்ததைக்கண்டு பரவசமடைகின்றனரே வொழிய அமெரிக்காவின் அந்தரங்கம் என்ன என்பதை அறிந்து கொள்ளவில்லையே!

குடிசைக் கைத்தொழில் குன்றுவதேன்?

காப்பதாக வாக்களித்த காங்கிரஸ் ஆட்சியில் கவனிப்பாரில்லை

தொழிலாளர் துன்ப நிலை துடைப்பாரின்றி வளர்கிறது

சென்னைமாகாணத்தில் 5-லட்சம் கைத்தறி நெசவாளர்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கும் வழியின்றி அல்லற்பட்டுக்கொண்டு கிடக்கிறார்கள்.

8000 தீக்குச்சித் தொழிலாளர் வேலையற்றுத் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மதுவிலக்கினால் வேலையிழந்து விட்ட மரமேறிகள் லட்சக்கணக்கான மக்கள்—வேலையற்று மனைவி மக்களுடன் வறுமை வாய்ப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு மற்றக் கைத்தொழில்களில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் பலரும்வேலையின்மையால், பலவகைச் சங்கடங்களுக்கும் ஆளாகி வறுமைத் துயரில் ஆழ்ந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கெல்லாம் வழிசெய்ய சென்னை அரசாங்கம் முன்வந்திருப்பதாகத் தெரியவில்லை.

சென்னை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி நெசவு ஜவுளிகள் தாராளமாக வெளியே ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுவதுடன், அரசாங்க இலாக்காக்களில் பயன்படுத்தும் துணிகள் யாவும் கைத்தறி நெசவுத் துணியாகவே இருக்குமாறு அரசாங்கம் உத்திரவிடலாமல்லவா? அதுமட்டுமின்றி, அரசாங்க உத்தியோகஸ்தர்களும், அமைச்சர்களும், சட்டசபை உறுப்பினர்களும் கைத்தறி நெசவுத் துணிகளையே வாங்கி அணியமுன்வரவேண்டும். இவ்வாறு செய்வதால், கைத்தறி நெசவாளர் உற்பத்தி செய்யும் துணிகள் தேங்க வழியின்றி, அவர்களுக்கு வேலை கிடைக்கும். இல்லையெனின், கைத்தறி நெசவாளர்களுககு வேலை தர இன்னும் சில ஆலைகளைச் சென்னை அரசாங்கம் நடத்த முன் வரவேண்டும். அதற்குரிய நிலையில் அரசாங்கம் இல்லை யென்றால், இவ்வளவு பேருக்கும் அதாவது கைத்தறி நெசவுக்காரர்கள், மரமேறிகள், மற்றுமுள்ள வேலையில்லாத் திண்டாட்டக்காரர்கள் அனைவருக்கும நாட்டில் உள்ள நிலங்களைப் பிரித்துக் கொடுத்து, ஓரிரண்டாண்டுகளுக்காவது அவர்கள் உழவுத் தொழிலில் பயன் பெறத் தொடங்கும்வரையிலாவது அரசாங்கம் அவர்கட்கு வேண்டும உதவிகளைச் செய்து, அவ்வளவு பேரையும் உழவர்களாகச் செய்தால், பயிர்த் தொழில் பெருகி; அதன்மூலம் உணவுப் பஞ்சத்தை ஓட்டவேனும் வழி பிறக்கும். அரசாங்கம் இதைச் செய்ய முன்வருமா? இதற்கும் மத்திய அரசாங்க தேவதையிடம் வரங்கேட்டுத் தவங்கிடக்குமா?

அடுத்தாற்போல், நம மாகாண தீக்குச்சித் தொழில், இயந்திரப் போட்டியிலிருந்து சமாளித்து அதில் ஈடுபட்டுள்ள 8000பேர் நிலை காப்பாற்றப்பட வேண்டுமானால் குடிசைத் தொழிலாக நடப்பதன் மூலம் தயாராகும் தீக்குச்சிகளுக்கு எதிர்வரி நீக்கப்படவேண்டும். ரயிலில் அனுப்புவதற்குக் கட்டணத்தில் சலுகை காட்டப்படவேண்டும். விற்பனைவரியைக் குறைத்தல் வேண்டும். தீக்குச்சிக்கு வேண்டிய ரசாயனப் பொருள்களைத் தாராளமாகப்பெற வசதி செய்துதரவேண்டும். அதற்கு வேண்டிய மரங்களைக் குறைந்த விலையில் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

இந்தத் தொழில்களை முன்னேற்றுவிக்க முயல்வது சென்னை மாநில அரசாங்கத்தாரின் கடமையேயாகும். இந்திய அரசாங்கம் இவ்விஷயங்களில் தக்க அக்கறை காட்டவில்லையெனின், சென்னை அரசாங்கம் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்தை நம்மவர் விஷயங்களில் அக்கறை கொள்ளுமாறு செய்தல் வேண்டும். அப்படியில்லாமல் போகுமிடங்களிலெல்லாம் குடிசைத் தொழில்களைப் பெருக்க வேண்டுமென்று பேசுவதும், குடிசைத்தொழில்களால் நாட்டு நிலை வளருமென்று கூறுவதும், மக்கள் மனம இத்துறைகளில் பெருவாரியாகத் திருப்பப்பட்டால் வேலையில்லாத்திண்டாட்டம்போய்விடுமென்றும் கூறி விட்டால் போதுமா?

இருக்கும் கைத்தொழில்களே இந்தக்கதியில் சோர்ந்து கொண்டிருக்கின்றனவென்றால், கவனிப்பாரற்றுக் கிடக்கின்றனவென்றால், இவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சோற்றுக்குத் திண்டாடுகிறார்களென்றால், மேலும் பல புதிய குடிசைத் தொழில்களைத் துவக்குவதற்கு முன் வர எவருக்குத் தைரியம் பிறக்கும்! எனவே, அமைச்சர்கள் வெட்டிப் பேச்சுப பேசிக்கொண்டிருப்பதை விட்டு, தேர்தல் கால வாக்குறுதிகளைப் போல், எதாவது மக்கள் மனம் மகிழக்கூடியவாறு பேசி விட்டு, அறிக்கைவெளியிட்டு விட்டு இருந்து விட்டால் எளிதில்மக்கள்ஏமாந்து பேசாமலிருந்துவிடுவார்கள் எனும காங்கிரஸ் மனப்பான்மையைவிட்டு, குடிசைத் தொழில்களை வளர்த்து அவற்றின் மூலமாக உற்பத்தியாகும பொருள்களின் விற்பனைக்கு வழிகாட்டி அத்தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்குமாறு செய்து, நாட்டின் துன்ப நிலையைப் போக்கச் சென்னை அரசாங்கம் முன்வரவேண்டும. இல்லையெனின்நாடுபஞ்சப் பிணியிலிருந்து தப்ப வழியில்லை.

என்ன சொல்லுகிறீர்கள்?

வட்டமேஜை மாநாடுகள் என்பவை வல்லரசுகள் மேற்கொள்ளும் அரசியல் தந்திரங்களில் மிக மிக முக்கியமானவை. கடைசி நேரத்தில் இந்த முறையைக் கையாண்டு மேலும மேலும் காலங்கடத்தவே வட்டமேஜை மாநாடுகள் பயன்படுவது வழக்கம். விடுதலைக்காகப் போராடும இந்தோனேஷிய மக்களுக்கு டச்சு அரசியலார் இப்பொழுது இதே மருந்தைத்தான் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதுகண்டு இந்தோனேஷிய மக்கள் உள்ளம் பதைக்கிறது. ஹேகில் நடைபெறும் மாநாடு தோல்வியுற்றால் மீண்டும் போராட்டம் நடத்தியே தீருவோம் என்கின்றனர். அண்மையில் இந்தோனேஷிய பத்திரிகை சங்கத் தலைவர் குஷோப் நீருபரிடம் இந்தோனேஷிய மக்களின் உள்ளக் குமுறலைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அவர் கூறுகிறார் :— 'ஹேக் மாநாடுவெற்றியில்முடிந்தாகவேண்டும். இல்லையேல் மீண்டும்போராட்டம் ஆரம்பமாகிவிடும. 'உண்டு, இல்லை' என்று முடிவுகாணும் வரை போராட்டம நீடிக்கும்" என்று பத்திரிகை சங்கத் தலைவரின் இந்தஎச்சரிக்கை, டச்சு அரசியலாரைப்பார்த்து 'என்னசொல்லுகிறீர்கள்?' என்றுகேட்பதுபோலவே யிருக்கிறது.

திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழாக் கூட்டங்கள்

19-10-49

திருவெறும்பூர் :— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத் தம்பி.

பல்லடம்:— மாலை 3-மணிக்கு — சி. என். அண்ணா துரை, எஸ். ஆர். சுப்பிரமணியம், பி. பழனிச்சாமி, ஜி. என். ராஜு

கருப்பூர்:— மாலை 7-மணிக்கு — சி. என். அண்ணா துரை, எஸ். ஆர். சுப்பிரமணியம, பி. பழனிச்சாமி, ஜி. என. ராஜு

சங்கரன்கோவில்:— காஞ்சி, கல்யாணசுந்தரம் எம். எஸ். ராம சாமி, கே. வி. கே. சாமி

திருச்சேறை :— ஈ. வெ. கி. சம்பத், எஸ், கே சாமி

20-10-49

விருதாசலம் :— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத் தம்பி.

21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத் தம்மையார், எஸ். கே. சாமி

சென்னைமைலாப்பூர்:-இரா. நெடுஞ்செழியன்.

செருடந்தானி:— ஜி. என. ராஜு

நாகர்கோவில்:— புலவர். கே. கோவிந்தன், இரெ. இளம் வழுதி, கி. மனோகரன்.

நீதிமன்ற நெடிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பந்தமாக அதிகாரிகள் பேரிலோ, சர்க்கார் மீதோ வழக்குத் தொடர முடியாது.

இதுதான் நீதியின் முன்னே கவர்னர் நிறுத்தியிருக்கும் கூரியவாளாகும்! காவற் படுத் தப்பட்டுள்ளோர் இனி நீதி மன்றத்திலே முறையிட முடியாதபடி செய்துவிட்டு, ஆணவ அதிகார பீடத்திலே அமர்ந்துள்ளனர், இன்றைய ஆளவந்தார்கள்! இத்தகைய முறையில் தானே இட்லரும் ஆட்சி செய்ததாகக் கூறுகிறார்கள்! இட்லர் சென்ற பாதை, காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு அவ்வளவு இனிக்கிறது! என் செய்வது!

அவசரச் சட்டமாகிய கூரிய வாளை, கவர்னர், நீதியின் முன்னே நிறுத்துவதற்குக் காரணமாக இருந்த நீதிபதிகளின் நான்கு தீர்ப்புகளை முன்னமேயே வெளியிட்டிருக்கிறோம். மேலும் இரண்டு வழக்கில் அளித்த தீர்ப்புகளின் சாரந்தான் கீழே தரப்படுவதாகும்.

கிருஷ்ணாவைச் சேர்ந்த ஜெ. வெங்கடநாராயணராவ் என்ற காவற்கைதி செய்து கொண்டமனுவின் பேரில் அளிக்கப்பட்ட தீர்ப்பு:—

"இது மிக விசித்திரமான வழக்கு மனுதாரர் சுமார் 14 திங்கள்களாகப் பாதுகாப்புக் கைதியாகவே சிறையில் வைக்கப் பட்டுள்ளார். இவ்வளவு காலம் வரை இவர்மீதுள்ள குற்றத்தை, விசாரணைக்குக் கொண்டுவாராமல் பெருந்தாமதம் செய்திருப்பதற்கு அரசாங்கத்தார் தரப்பில் திருப்திகரமான காரணம் காட்டப்படவில்லை. தக்க விளக்கமும் தரப்படவில்லை.

எதிரியைப் பாதுகாப்புக்கைதியாக வைப்பதற்குரிய, பொது நலப் பாதுகாப்புக்கு விரோதமான செயல்களைச் செய்ததாகவும் தக்கவாறு மெய்ப்பிக்கவில்லை. எனவே மனுதாரரின் விண்ணப்பம் நியாயமானதென்று நம்புகிறோம். அரசாங்கம், தனது இம்மாபெரும் தாமதத்திற்குத் தக்க விளக்கமும் தர முடியவில்லையாகையால். எதிரியைப் பாதுகாப்பில் வைத்ததே சரியில்லை என்று தெரிவதால், எதிரியை விடுதலை செய்கிறோம்."

மற்றொரு வழக்கில் ஜி. மல்லா ரெட்டி, பி. வேங்கடரெட்டி என்பார் இருவரையும், உயர் நீதிமன்ற நீதிபதிகள் விடுதலை செய்துள்ளனர். அதுபற்றிக் கூறிய தீர்ப்பு :—

"இவ்வழக்கில் மனுதாரர்களாகிய இருவரையும் பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருப்பதற்குக் காட்டப்பட்டுள்ள காரணங்கள்மிகப்பலவடங்கியநீண்ட பட்டியலாக இருக்கிறது. ஆனால். இவ்விருவரும், நாசவேலைகளில ஈடுபட்டார்கள் என்பதற்கோ. பொது மக்கட் பாதுகாப்புக்கு ஊறு விளைத்தார்கள் என்றோ பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்கள் என்றோ, அந்த நீண்ட பட்டியலில் ஒரு தெளிவான சம்பவமாவது, காரணமாவது குறிக்கப்பட்டில்லை. இவ்விருவரும் செய்துள்ள குற்றமெல்லாம் வேலை நிறுத்தங்களை நடத்தினர்கள், சொற்பொழிவுகள் செய்துள்ளார்கள என்பதேயாகும். இந்தச்செயல்கள் பொது அமைதிக் குலைவு ஆகிவிடாது. எனவே, இவ்விருவரையும் பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருப்பதற்கு எத்தகைய நியாயமுமில்லை எனக் கருதி, இவர்களை விடுதலை செய்கின்றோம்."

காவற் கைதிகள் இத்தகைய நீதிகளை இனிப்பெறக்கூடாது என்று எண்ணுகிறதுகாங்கிரஸ் அரசாங்கம் எப்படி 'தேசிய சுயராஜ்ய' சர்க்கார்!

அவரே சொல்லுகிறார்!

இந்தியா பல சரக்குகளின்உறைவிடம்

"இந்தியா ஒரு நாடல்ல. பல இனம், பல மதம், பல் கலாசாரங்களைக்கொண்ட ஒரு துணைக்கண்டம் அது போலவே இந்து மதம் என்ஒரு மதமுமில்லை. பல மதக் கருத்துக் கடங்கியகூட்டுச்சரக்கே இந்து மதம் எனப்படுகிறது. இந்நாட்டில் வெள்ளையா ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், இந்தியா ஒரு நாடு என்ற கருத்து பரவலாயிற்று அதுவும வெள்ளையர் தமது ஆட்சி முறையின் வசதியைக் கருதிசெய்து வைத்த ஏற்பாடு" என்று திராவிடர் இயக்கம் பல ஆண்டுகளாகக் கூறி வருகிறது. இது கண்டு சீறுகின்றனா தேசியவாதிகள். இவ்வுண்மையைக் கூறும நமக்கு வகுப்புவாதிகள் என்னும்பட்டம் சூட்டுகின்றனர் அப்படிப்பட்டஅன்பர்களின் சிந்தை தெளிய வேண்டும் என்பதற்காக இந்தியத் துணைக்கண்டத்தின் முதலமைச்சர் பண்டித நேரு அவர்களின் கருத்தையே மருந்தாகத் தர விருமபுகிறோம். அவர் சொல்லுகிறார்:—

"......பல்லாயிர வருஷங்களாக இந்தியாவின்மீது படையெடுத்து வந்த வியாபாரிகள்; மத பிரசாரகர்கள் முதலியோரின் பழக்க வழக்கங்கள, கலாச்சாரங்கள அனைத்தையும் இந்தியா ஜீரணித்துக்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் ஆத்மீகத்துறையில் இந்தியாவுக்குப பலத்த அஸ்திவாரம இருந்தது தான்."

என்று அண்மையில் அமெரிக்காவில் பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில் அவர் குறிப்பிட்டுள்ளார் இந்தியாவைப்பற்றி நாம் கூறும் கருத்துரைகளுக்குப் பண்டிதரின் இந்தப பேச்சுகளைவிட வேறு எடுத்துக்காட்டுகளும வேண்டுமோ?

இனி நடப்பவை

நாகர்கோவில்— திராவிட முன்னேற்றக் கழகம்— நாகர்கோவில் நகரத் துவக்கவிழாக் கூட்டம் 21-10-49-ல் நடைபெறும். அது போது தோழர்கள் புலவர் கே. கோவிந்தன், இரெ. இளம்வழுதி, கே. மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருவரம்பூர்— திராவிட முன்னேற்றக் கழகம்— திருவரம்பூர் சிற்றூர்க் கிளையின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் 19-10-49 புதன் மாலை 6-30 மணிக்குத் தோழர் எ. பரமசிவம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் "திராவிடர்களின் எதிர்காலம்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றுவர்.

திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம்

திருப்பூர், அக். 9—

இவ்வூர் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம், 2—10—49 அன்று தோழர் ஏ. பி. சாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் நிறுவப்பட்டது. புதிய செயற்குழுவும அமைக்கப்பட்டது.

செயலாளர்:— என். பால்ராஜ்; துணைச் செயலாளர்:— ஏ. அரசன்; பொருள் உறுப்பினர்:- ஏ. பி. சாமி; விளம்பர உறுப்பினர்:— எம். என். அண்ணா. ஏனைய செயற்குழுவினர்:—டி. நடராசன், அப்துல் காதர், ஏ. சுந்தரம், கே. பி. செல்வன், க. சுப்பிரமணியம், முக்கண்ணன், க. வேல்சாமி, டி. வி. பி. அப்பன், ராமசாமி, க. ச. சுந்திரம், எம். பி. ராமசாமி, வேல்தாசன், வை. அரசு, பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

கழக நடவடிக்கைகள்

அருப்புக்கோட்டை நகரக்கிளை:- திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர விரும்புவோர் 20-10 49க்குள் தஙகளுடைய பெயர்களைத் தஙகளிடம பதிவு செய்து கொள்ளுமாறுத் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, எஸ். செல்லையா, சிவசண்முகசுந்தரம் ஆகியோர் வேண்டுகின்றனர்..

* * *

நாகப்பட்டினம் நகரக்கிளை:— 8—10—49 மாலை 6 மணிக்கு தோழர் கே. பாப்பையன் அவர்கள் தலைமையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது மூன்று தீர்மானஙகள் நிறைவேற்றப் பட்டன. (1) 16-10-49ல் தி.மு. கழகக் கட்டிடத் திறப்பு விழாவும், கொடியேற்று விழாவும் நடத்துவது. (2) டை கழகத் துவக்கு விழா, 30-10 49-ல் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், தோழியர் மூவாலூர், இராமாமிர்தத்தம்மையார் ஆகியோரை அழைத்து நடத்துவது. (3) மேலும் செயலுறுப்பினர்களாகத் தோழர்கள் பி. எஸ். எஸ். சிவக்கொழுந்து, என். எஸ். குழந்தைசாமி, கே. எஸ். மணி ஆகியவர்களைச் சேர்த்துக்கொள்வது.

* * *

திருமங்கலம் சிற்றூர்க் கிளை :— இவ்வூர் தி. மு. கழகத்தாரால் பஸ்ஸ்டாண்டுக் கருகில் தி. மு. கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

சென்னை புரசைவாக்கம் நகர உட்கிளை :—9-10-49 காலை 10 மணிக்கு கழகத்தின் செயற்குழுக் கூட்டம் டை கூடியது. அது போது இரண்டு தீர்மானஙகள் நிறைவேறின. (1) அக்டோபர் முடிவுக்குள் பிரசாரக் குழுவினரைக் கொண்டு டை கழகத்தின் திறப்பு விழா ஆற்றுவது. (2) திறப்புவிழாவிற்கான செலவுக்கு வசூலித்த நன்கொடையை 20—10—49 அன்று கூடும் கூட்டத்தில், நிதி உறுப்பினரிடம் சேர்ப்பித்துவிட வேண்டியது தலைவர் முடிவுரை யாற்றியபின் நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் ஆ. ச. சுந்தர மூர்த்தி எழுதுகிறார்.

* * *

சேலம் செவ்வாய்ப்பேட்டை நகர உட்கிளை:— டை கிளையின் செயற்குழு 5—10—49 ல் தோழர் பி. கே. வரதராசு அவர்கள் இல்லத்தில கூடி, நான்கு தீர்மானங்களை நிறைவேற்றிற்று.

இக் கழகத்திற்கெனக் கட்டிடம் ஒன்று தோழர் பி. ஆர். மாணிக்கம் அவர்களின் காலி நிலத்தில் கட்டிக் கொள்வதற்கு டை தோழர் அனுமதித்து விட்டதால்டைநிலத்தில் கழகக் கட்டிடம் கட்டிக் கொள்வதென்றும, 17-10 49-ல் தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்களைக்கொண்டு இந் நகரக் கிளைகளோடு சேர்ந்து, மிகச் சிறப்பாகப் பொதுக் கூட்டம் நடத்தி டை கழகத்திற்கு முன்பு தி. மு. க. கொடியேற்றுவதென்றும, பொதுக் கூட்டத்திற்கு இயக்கத் தோழர்கள் இயன்றவரை உதவி செய்வதென்றும்; கழகக் கட்டிடத்திற்கும் கூட்டத்திற்கும் செலவுக்காக நிதி திரட்டுவதற்குத் தோழர்கள் பி. கே. வரதராசு, ஆர். நாராயணசாமி, பி. ஆர். சுப்பிரமணி, ஏ. சித்தையன் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதென்றும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் பி. ஏ. சித்தையன், பி. எல். சஙகரன், பி. வி. கிருஷ்ணசாமி ஆகியோரை மேற்கொண்டு சேர்த்துக்கொள்வதென்றும், விளம்பர உறுப்பினராகத் தோழர் கே. வி. குப்புசாமியை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டதெனத் தோழர் கே. வி. குப்புசாமி வி. உறுப்பினர் அறிவிக்கிறார்.

இராமனாதபுரம் மாவட்ட தி. மு. க. கிளை:—சந்தா ரசீதுப் புத்தகங்கள் கோரி எழுதியத் தோழர்களுக்கு, தலைமைக் கழகத்திலிருந்து தனக்குக் கிடைத்தவுடன் அனுப்பி வைப்பதாகத் தோழர். எம். எஸ். இராமசாமி (அமைப்பாளர்) அறிவிக்கிறார்.

* * *

வடாத்தம்பட்டிச்சிற்றூர்க்கிளை:- இவ்வூரில் 2-10-49ல் தோழர் மாடசாமி தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழகள் அப்பாசாமி, எம். எம். பீர்முகம்மது. சண்முகவேல். தளவாய், ஆ. திராவிடமணி ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் ரெயலாளர் நன்றி கூற, தோழர் அப்பாசாமியின் இன்னிசையுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

தூத்துக்குடி நகரக்கிளை:— இந்நகரிலுள்ள நகர உட்கிளைக் கழகங்களுக்கெல்லாவற்றிற்க்கும் உறுப்பினர் சேர்க்கும் புத்தகஙகள் கொடுக்கப்பட்டுள்ளன. தி. மு. கழகத்தில் சேர விரும்பும் தோழர்கள், எந்தக் கிளைக கழகத்திலாவது தஙகள பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம எனவே துரிதமாக உறுப்பினர்களாகச் சேரும்படித் தோழர் இரா. இராமலிங்கம் செயலாளர் வேண்டுகிறார்.

* * *

அரகண்டநல்லூர்சிற்றூர்க்கிளை:- 9—10—49 அன்று தோழர் ஏ. பி. பரசுராமன் அவர்கள் இல்லத்தில், தி. மு. கழகம் இவ்வூர் கிளைக்குக் கீழ்க்கண்ட புதிய செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஏ. பி. ஆறுமுகம், நிதி உறுப்பினர்:—சி. வி. கலிய பெருமாள். ஏனைய செயற்குழுவினர்:—ஏ. பி. பரசுராமன், கே. வி. தஙகவேல், ஏ. கே. மகாலிங்கம், எம. பாண்டுரங்கன், என். முனுசாமி, ஏ. சக்கரபாணி, து. வெங்கிடேசன், கே. சுப்பிரமணியம், ஏ. ஆர். பரசுராமன். பின்பு தற்காலிக தி. மு. க. கொடியைத் தோழர் சி. என். அண்ணாத்துரையைக் கொண்டு ஏற்றுவிப்பது என முடிவு செய்யப்பட்டுக்கூட்டம் முடிந்தது. எனத் தோழர் ஏ ஜி. பழனிவேலு எழுதுகிறார்.

* * *

சென்னை மைலாப்பூர் நகர உட்கிளை:—இக்கிளையின் உறுப்பினர்கள் கூட்டமொன்று 8-10-49 இரவு தோழர் ஏ. ஜெயராமன், அவர்கள தலைமையில் கூடிற்று. அதுபோது டை கிளையின் துவக்க விழாவை தோழர்களின் நன்கொடையுதவிகொண்ட23-10-49க்குள் நடத்துவதென்றும, தோழர் த. மா. மணி அவர்களையும் செயற்குழுவினராகச் சேர்த்துக்கொளவதென்றும், அண்மையில் இயற்கையெய்திவத் தோழர் ஏ. கே. பிள்ளை அவர்களுக்காக வருந்துவதாகவும, தீர்மானிக்கப்பட்டது. தோழர் பொன். கு. கோதண்டபாணி, தோழர் ஏ. கே. பிள்ளையைப்பற்றி பேசிய பின்பு கூட்டம் முடிவுக்கு வந்தது. எனவிளம்பர உறுப்பினா அறிவிக்கிறார்.

சந்தா விவரம்

20—10—49 முதல்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

—மானேஜர்:

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

கொளத்தூர்—சிற்றூர்க்கிளை

கொளத்தூர், அக். 11—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 10—10—49 அன்று இரவு தோழர் கே. அனந்தராசு அவர்கள் இல்லத்தில், தோழர் கே. பி. அப்பாவு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது "திராவிட முன்னேற்றக் கழகம்-கொளத்தூர் சிற்றூர்க்கிளை" அமைக்கப்பட்டுப், பின் வரும் செயற்குழுத்தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. குருசாமி; துணைச்செயலாளர்:—ஏ. ஜி. மாரிமுத்து; பொருள் உறுப்பினர்:-கே. அனந்தராசு; விளம்பர உறுப்பினர் :—ஜி. சதாசிவம். ஏனைய செயலுறுப்பினர்கள்:— கே. என். வையாபுரி, கே. என். சித்து, கே. வி. சாமி, கே. பி. அப்பாவு ஜி. ஓபிளி, கே. ஆர். செங்கண்ணன், கே. ஈ. வரதராசு, கே.எஸ். காதர்பாட்சா, ஜி. ஆர். சாமி, கே. எம். பெருமாள். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. எனத்தோழர் ஜி. சதாசிவம் (வி. உறுப்பினர்) தீட்டுகிறார்.

* * *

சோபனபுரம்—சிற்றூர்க்கிளை

சோபனபுரம் அக். 11—

இவ்வூர் திராவிட இயக்க ஆதரவாளர்கள் 10—10—49 காலை 8 மணிக்குத் தோழர் அருணாசலம் அவர்கள் இல்லத்தில் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்— சோபனபுரம் சிற்றூர்க் கிளை" அமைத்து, செயற்குழுவொன்று தேர்ந்தெடுத்தனர்.

செயலாளர்- எம். அருணாசலம்; நிதி உறுப்பினர்- ஏ. ராமசாமி; விளம்பர உறுப்பினர்- எஸ். டி. சீனிவாசன். ஏனைய செயலுறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனத் தோழர் எஸ். டி. சீனிவாசன் (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

கணபதிபாளையம்—சிற்றூர்க் கிளை

கணபதிபாளையம், அக். 11—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் 8-10-49-ல் கூடித் "திராவிட முன்னேற்றக் கழகம்— கணபதிபாளையம் சிற்றூர்க் கிளை" அமைத்தது. பின்பு புதிய செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:— சொக்கலிங்கம்; துணைச செயலாளர்- சங்கரன்; பொருள் உறுப்பினர்- வீராசாமி; விளம்பர உறுப்பினர்- ராமசாமி. ஏனைய செயற்குழுவினர்கள்:— நஞ்சப்பன், பழனிச்சாமி, குப்புசாமி, சே. மலையப்பன். மேலும் செயலுறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள டி குழுவிற்கு உரிமையளிக்கப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. எனத் தோழர் ராமசாமி (வி. உறுப்பினர்) எழுதுகிறார்.

* * *

ஏரல்—சிற்றூர்க் கிளை

ஏரல், அக். 11—

நெல்லை மாவட்டம், ஏரல் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 9—10—49 ல் இவ்வூர் சி. எம். எஸ். பள்ளியில், தோழர் பி. எஸ். வாசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது 'திராவிட முன்னேற்றக் கழகம்— ஏரல் சிற்றூர்க் கிளை' திறுவப்பட்டுப் புதிய செயற்குழுவொன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்கள்:—வி. ஆள்வார், ஆர். சிவபெருமான். பொருள் உறுப்பினர்:—பி.எஸ். கே. தங்கம்; விளம்பர உறுப்பினர் :— வி. பி. எஸ். வாசன். ஏனைய செயலுறுப்பினர்கள்:—த. பெரியண்ணு, பெ. அருணாசலம், நா. லிங்கம, எஸ். நாராயணன், எம். எஸ். மணி.

பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

சிறுத்தொண்டநல்லூர்— சிற்றூர்க் கிளை

சிறுத்தொண்டநல்லூர், அக். 10—

9—10—49-ல் கூடிய தி. க. செயற்குழுவினரால் இவ்வூர்த் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—சிறுத்தொண்டநல்லூர் சிற்றூர்க் கிளை" என மாற்றியமைக்கப்பட்டு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் :— இரா. பாலராசு; துணைச் செயலாளர்:— ம. பொன்னையா; நிதி உறுப்பினர்:—மா. அருணாசலம்; விளம்பர உறுப்பினர்:—இல. அறவேந்தன். ஏனைய செயற்குழுவினர்:—ச. சிவசங்கு, ச. அருணாசலம், இரா. தமிழரசு, தங்கராசன், முத்துமாலை, வாழ்வாங்கு, சௌந்திரபாண்டியன், ஆ. இராமசாமி என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

நாரணத்தேவன்பட்டி — சிற்றூர்க் கிளை

நாரணத்தேவன்பட்டி, அக். 11—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம, தோழர் இரா. தேவன் அவர்கள் இல்லத்தில், தோழர் எஸ். வி. சாமி அவர்கள் தலைமையில் 9—10—49 அன்று நடைபெற்றது. அப்பொழுது "திராவிட முன்னேற்றக் கழகம் — நாரணத்தேவன்பட்டி சிற்றூர்க் கிளை" அமைக்கப்பட்டு செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் :— இரா. தேவன்; துணைசசெயலாளர் :— சி. இராமசாமி; பொருள் உறுப்பினர்:— வை. பெ. கணக்கன்; விளம்பர உறுப்பினர் :—சி. பெத். ராஜன். ஏனைய செயலுறுப்பினர்கள்:— வயிரவராவணன், சு. சுப்பையா, இரா. தங்கவேல், பெர. சுப்பையா. எனச் செயலாளர் தீட்டுகிறார்.

* * *

ஆமூர்—சிற்றூர்க்கிளை

ஆமூர், அக். 11—

இவ்வூர் திராவிடர் கழகத்தின் கூட்டம டி கழகக் கட்டிடத்தில் 9-10-49ல் கூடியது. அதுபோது இவ்வூர் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டுத், "திராவிட முன்னேற்றக் கழகம்— ஆமூர் சிற்றூர்க்கிளை" திறுவப்பட்டது. பிறகு புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-ஏ. டி. அருணாசலம்; துணைச் செயலாளர்-பி. கைலாசம; நிதி உறுப்பினர்- வி. கந்தன்; விளம்பர உறுப்பினர்- ஆர். தங்கையன். ஏனைய செயற்குழுவினர்- இரா. கிருட்டினமூர்த்தி, காத்தான். செயற்குழுவினை விரிவு படுத்தச் செயலாளருக்கு உரிமையளிக்கப்பட்டது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

மேலச்சின்னணம்பட்டி— சிற்றூர்க் கிளை

மே. சின்னணம்பட்டி, அக். 11—

மதுரை மாவட்டம் மேலச்சின்னணம்பட்டி தி. மு. கழக உறுப்பினர்களின் கூட்டம், தோழர் ந. கந்தசாமி அவர்கள் தலைமையில் 10-10-49 அன்று கூடியது. அதுபொழுது "திராவிட முன்னேற்றக் கழகம்— மேலச்சின்னணம்பட்டி சிற்றூர்க் கிளை" திறுவப்பட்டுக் கீழ்க்கண்ட புதிய செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— பழனிச்சாமி; துணைச் செயலாளர்- கு. தங்கையா; நிதி உறுப்பினர்- வே. சுப்பிரமணியன்; விளம்பர உறுப்பினர்- ப. சுப்பிரமணியன். ஏனைய செயலுறுப்பினர்கள்:— ந. கந்தசாமி, சொ. அழகர்சாமி, ராஜாங்கம், கா. ந. ராசன், சு. சின்னணன். பின்பு சிலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது எனத் தோழர் ப. சுப்பிரமணியன் (வி. உறுப்பினர்) வரைகிறார்.

* * *

கள்ளிக்கோட்டை (மலையாளப்பகுதி)-நகரக்கிளை

கள்ளிகோட்டை, அக். 12—

தென்மலையாளப்பகுதி கள்ளிக்கோட்டை தி.மு. கழக அமைப்புக் கூட்டம் 11—10—49ல் தோழர் வி. என். நாராயணசாமி அவர்களின் முடி திருத்து நிலையத்தில், தோழர் கே. இரத்தினம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுபோது தி. மு. கழகக் கொள்கைகளைக் குறித்துத் தோழர்கள் வி. என். நாராயணசாமி, பி. கிருஷ்ணசாமி, வி. செங்கமலம், வி. கந்தசாமி ஆகியோர் பேசினர். பின்பு "திராவிட முன்னேற்றக்கழகம்— கள்ளிக்கோட்டை நகரக்கிளை" அமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-வி.என். நாராயணசாமி; துணைச் செயலாளர்:— வி. கந்தசாமி; பொருள் உறுப்பினர்:— கே. இரத்தினம்; விளம்பர உறுப்பினர்:—பி. கிருஷ்ணன். ஏனைய் செயலுறுப்பினர்கள்:—வி. செங்கமலம், ஷேக்மகம்மது, மரியசாமி. மேலும் செயலுறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு, செயலாளருக்கு உரிமையளிக்கப்பட்டது. பிறகு டி கிளைக்கழகத்தை தலைமைக்கழகம் ஏற்றுக்கொண்டு, மலையாள நாட்டில் தி. மு. கழகக் கொள்கைகளைப்பரப்புவதற்குக் கழகசசட்டதிட்டங்களை அனுப்பிவைக்கும்படி கோரியும், கழக உறுப்பினர்கள் சேர்க்கும் புத்தகங்கள் அனுப்பிவைக்கும்படி தலைமைக்கழகத்தைவேண்டுவதாகவும், டி கிளையின் துவக்க விழாவிற்குத்தோழர் சி என். அண்ணாத்துரை அவர்களை அழைப்பதென்றும இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. டிகழகத்துவக்கவிழாச்செலவுக்கென ரூபாய் 54 கூட்டத்தில் வசூலிக்கப்பட்டது. பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனத்தோழர் வி. என். நாராயணசாமி (செயலாளர்) எழுதுகிறார்.

* * *

அம்பில்—சிற்றூர்க்கிளை

அம்பில், அக். 11—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம தோழர் எம். பி. செல்லையா அவர்கள் இல்ல மேல் மாடியில், தோழர் ஏ. பி. தர்மலிங்கம அவர்கள் தலைமையின் கீழ் 5—10—49 ல் நடைபெற்றது. அப்போது "திராவிட முன்னேற்றக் கழகம்—அம்பில் சிற்றூர்க் கிளை" திறுவப்பட்டுப் புதிய செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ஏ. பி. தர்மலிங்கம்; துணைச்செயலாளர்:- சி. செல்லப்பா; நிதி உறுப்பினர்:- எம். பி. செல்லையா; விளம்பர உறுப்பினர்:- எம். இரத்தினம். ஏனைய செயலுறுப்பினர்கள்:—ஏ. பி. தங்கவேல், என். தர்மலிங்கம், எம். கலியபெருமாள். தேவைப்படும்பொழுது மேலும் செயற்குழுவினரைச் சேர்த்துக்கொள்ளச் செயற்குழுவிற்கு உரிமை வழங்கப்பட்டது. இன்னும சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிவடைந்தது. எனத் தோழர் மு. இரத்தினம் (வி. உறுப்பினர்) தெரிவிக்கிறார்.

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம்

ரூ. 5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

நாட்டு நடப்பு

பலராமபுரம்—இவ்வூர் மாணவர் பயிற்சிக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா 9—10—49 மாலை 5 மணிக்குத் தோழர் எஸ். ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. அருணாசலம், தமிழாசிரியர் டி. கே. சிதம்பரம், நா. சிவன்பாதம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * *

பொட்டல்புதூர் — இவ்வூர் இளைஞர் கல்விச் சங்கத்தின் சார்பாக 5-10-49-ல் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் செய்யதாபி அவர்கள் தலைமையில், தோழர்கள் கே. எம். முகமமதுஉமர், கே என். முகம்மது மைதீன், எம். எம். அஹமது மைதீன், கே. வி. காதர் மைதீன் ஆகியோர் பேசினர். பின்பு தலைவர் பெரியார், கழகக் கொள்கைக்கு மாறாக மணஞ் செய்து கொண்டதைக் கண்டித்தும், இனி அவர் தலைமையில் பணிபுரிவதில்லையென்றும், 16-10-49க்குள் இவ்வூரில் தி. மு. க. கிளை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனத் தோழர் எம். எம். அகமது மைதீன் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

கடையநல்லூர் — இவ்வூரைச் சேர்ந்த கிருஷ்ணபுரம் புதுமை நாடகக் குழுவின் கூட்ட மொன்று 1-10-49 இரவு இவ்வூர் ஆரம்ப பாடசாலையில் தோழர் ஆ. திராவிடமணி அவர்கள் தலைமையில் நடைபெறறது. அதுபோது நடிகக் குழுவினர் நடந்துகொள்ள வேண்டிய முறை, அவர்களின் தொண்டு ஆகியவைபற்றித்தோழர்கள் சி. நடராஜன், அப்பாசாமி, எம். எம். பீர் முகம்மது ஆகியோர் பேசினர். அன்று இரவு 8 மணிக்கு தோழர் எம். எம. பீர் முகமமது அவர்கள் தலைமையில் டி நாடகக் குழுவினரால் "வீரமணி" என்னும் சீர்திருத்தநாடகம் நடிக்கப்பட்டது. நாடக ஆரம்பத்தில் அமைப்பாளர் தோழர் ஆ. திராவிடமணி பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் நாடகம் முடிவுற்றது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

பொள்ளாச்சி:— இந்நகர் திராவிட முன்னேற்ற வாலிபர் கழகத்தின்செயற்குழுக் கூட்டம், தோழர் அ. ச. பாலு தலைமையில் கூடியது. அதுபோது "இராவண காவியம்" "இலட்சிய வரலாறு" போன்ற நூலகளை சென்னை அரசியலார் தடைசெய்திருப்பதைக் கண்டித்தும், "தீபாவளியைமக்கள் கொண்டாடக்கூடாது" என ஓர் அறிக்கை விடுவதென்றும், தீபாவளி எதிர்ப்பு ஊர்வலம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு தோழர் பி. என். இராமாநுசம் தலைமையில நடந்த சொற்பொழிவுப் போட்டியில்தோழர்கள் இரா. ஆறுமுகம், பழனிசசாமி, ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்பு நன்றி கூறலுடன் கூட்டம்முடிந்தது என வி. உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

தூத்துக்குடி—இந்நகர் சண்முகபுரம் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் ஞாபகார்த்த வாலிபர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 9—10—49 காலை 10-மணிக்கு நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்கள்:—பெரியாரின் போக்கின் காரணமாக அதனின்று விலகி 17—9—49-ல் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருப்பதை இக்கழகம் ஆதரிக்கிறது. தி. மு. க. கொடியை ஏற்றி வைப்பது. டி சங்கத்தின் புதிய செயற்குழுத் தேர்தலை 16—10—49-ல் நடத்துவது. எனச செயலாளர் எழுதுகிறார்.

தேசமுகிப் பேட்டைச்சிற்றூர்க் கிளை:-மதுராந்தகம தாலுகாக்களைச் சேர்ந்த சிறறூர்களில் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் அமைத்துத் தருவதற்கும், சொற்பொழிவாற்றுவதற்கும், கழகப் பண்கள் பாடுதற்கும பின் வரும் தோழர்கள இசைந்துள்ளனர். கே. சி. துரைசாமி, என். மாணிக்கம், டி. சுப்பிரமணியம், எம். எஸ். மணி வி. திருநாவுக்கரசு. எனத் துணைச் செயலாளர் வரைகிறார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

தஞ்சை, அக். 13—

30—9—49 டி சங்கத்துத்தமிழ்ப் பெருமன்றத்தில் நாவலர். ச. சோமசுந்தரபாரதியார், எம். ஏ. பி. எல், அவர்கள் தலைமையில் கூடியுள்ள தமிழ்ப்பேரவை.

1. தமிழ் நாட்டில் தமிழே முதன் மொழியாக இருக்க வேண்டும, என்றும்;
2. பழமையும், தனிமையும், தாய்மையும், சிறப்பும வாய்ந்த தமிழ் மொழியே இந்தியப் பொது மொழியாக இருப்பதற்கு, வேறெந்த மொழியையுமவிடபமிகுதிம தகுதி வாய்ந்தது, என்றும;
3. ஆட்சியாளர்முதலியோர் தாள் போகுவதெலலாம தமிழிலேயே இருக்க வேண்டும், என்றும;
4. தமிழ நாடெல்லை வடக்கே திருவேங்கட மலையும, தெற்கே கன்னியா குமரியும், கிழக்கும் மேறகும் கடலுமாக இருக்க வேண்டும, என்றும்;
5. சென்னை மாநகரம் தமிழரதாகவும, தமிழ் நாட்டுததலைநகராகவும் இருக்கவேண்டும், என்றும;
6. சென்னை நகரை வேறெவருக்கும் பிரிததுக்கொடுக்கவோ தனிமாகாணமாக்கவோ யாருக்கும் உரிமை இல்லை, என்றும், அங்ஙனம பிரிக்கவோ தனிமாகாணமாக்கவோ கூடாது. என்றும;
7. இம் முடிபுகளை ஆட்சியாளர் முதலிய எலலோருக்குமதெரிவித்து வற்புறுத்திக் கூறுகிறது, என்றும;
8. இத்தமிழ் நாட்டிலுள்ள எல்லாத தமிழக் கழகங்களும சங்கங்களும் இந்த முடிபுகளை நிறைவேற்றி வைக்க வேண்டும, என்றும;
9. இந்த முடிபுகளை ஆட்சியாளருக்கும், புதினத்தாளகளுககும, தொடர்புள்ள ஏனையாககும் அனுப்பி வைக்குமபடி கரந்தைத் தமிழ்ச்சங்க அமைச்சரை வேண்டிக் கொள்கிறது, என்றும;

மாறுபட்ட கருத்து எதுமின்றி ஒரு மிதது முடிவு செய்கின்றது.

முன்மொழிந்தார்: இராவ் சாகிபு ஐ. குமாரசாமி அவர்கள் பி. ஏ. வழிமொழிந்தார்: தோழர் கோ. தியாகராசன அவர்கள், ஜி. எம். வி. சி. இதறகு ஆவன செய்ய வேண்டுவதாக அமைச்சர் எழுதுகிறார்.

சௌந்திர பாண்டியன் தமிழர் சமதர்ம சங்கம்

வடக்கூர், அக். 10—

வடக்கூர் (தூத்துக்குடி) சௌந்திர பாண்டியன் தமிழர் சமதர்ம சங்கத்தின் அங்கத்தினர்கள் கூட்டம் 9—10—49-ல்நடைபெற்றது. கூட்டத்திறகு தோழர் எஸ். செமபுலிங்கம தலைமை வகித்தார். அதுபோது, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் டி கழகம் ஒத்துழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு, புதிய செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:—வி. டி. பாண்டியன்; துணைச செயலாளர்:—பிச்சையா; பொருள் உறுப்பினர்:— ஜி. பால்தேவபிச்சை; ஏனைய செயலுறுப்பினர்கள:—ஏ. செல்லத்துரை (கணக்குத்தணிக்கையாளர்), டி. பிச்சைமணி, ஞா. பாஞ்சோதி, எஸ். செமபுலிங்கம், எஸ். கே. செல்லையா, மா. சு. பால், ஆர். ஞானப்பிரகாசம், ஆர். முத்துசாமி. எனச் செயலாளர் எழுதுகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.